# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
(பதிவு எண் 237/84)

தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeags@gmail.com

மாநிலத் தலைவர்
மு.சுப்பிரமணியன்

பொதுச் செயலாளர்
மு.அன்பரசு

மாநில துணைத் தலைவர்கள்
ந.குமாரவேல்
ஆ.செல்வம்
எஸ்.தமிழ்ச்செல்வி
சு.பார்த்திபன்
மொ.ஞானத்தம்பி
மு.சுப்பிரமணியன்

மாநிலப் பொருளாளர்
எம்.தங்கராஜ்

மாநிலச் செயலாளர்கள்
இரா.பன்னீர்செல்வம்
சி.ஆர்.இராஜகுமார்
என்.ஜனார்த்தனன்
தி.கலைச்செல்வி
எம்.சௌந்தரராஜன்
ஏ.பெரியசாமி


ஊடக செய்தி 31 / 2017 — நாள் : 29.11.2017

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு,சுப்பிரமணியன்.

பொதுச் செயலாளர் மு.அன்பரசு ஆகியோர் இணைந்து வெளியிடும் பத்திரிகை செய்தி

## ஊடகச் செய்தி

பேச்சு வார்த்தை என அழைத்து, செவிலியர் சங்கத் தலைவர்களை அச்சுறுத்தி,
அடக்குமுறையை ஏவி, போராட்டத்தை திரும்பப்பெற கட்டைபஞ்சாயத்து நடத்தி
செவிலியர்களின் போராட்டத்தை ஒடுக்கப் பார்த்த
ஆட்சியாளர்களின் இழிசெயலைக் கண்டித்து

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் பெருந்திரள் ஆர்ப்பாட்டம்!

தமிழ்நாடு மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் நடத்தப்பட்ட போட்டித்தேர்வின் மூலம் 2015ஆம் ஆண்டில் செவிலியர் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட செவிலியர்கள் ஒப்பந்த அடிப்படையில் மாதம் ரூ.7,700/- தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வருகிறார்கள். தேர்வு வாரியம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவர்கள், மருந்தாளுநர்கள், ஆய்வக நுட்புநர்கள் போன்றோர் காலமுறை ஊதியத்தில் பணியமர்த்தப்பட்டுள்ள நிலையில் இவர்கள் மட்டும் அரசாணை எண்.161 (பொதுப்பணி-அ) துறை, நாள் 01.02.1962க்கு எதிராகவும், இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 39(d) வழங்கியுள்ள "சமவேலைக்கு சமஊதியம்'' என்ற கோட்பாட்டிற்கு முரணாகவும் ஒப்பந்தமுறை ஊதியத்தில் பணியமர்த்தப்பட்டுள்ளதை அரசுக்கு சுட்டிக்காட்டி கடந்த இரண்டு வருடங்களாக கோரிக்கை மனுக்கள், பிரதிநிதித்துவங்கள் மற்றும் நேரடி சந்திப்புகள் மூலம் தங்களை காலமுறை ஊதியத்தில் நிரந்தரப் பணியாளர்களாக பணியமர்த்தக் கேட்டு வருகின்றனர். அரசுத் தரப்பில் சுகாதாரத் துறை அமைச்சரோ, சுகாதாரத் துறை செயலாளரோ இவர்களது கோரிக்கைகளை ஒரு பொருட்டாக மதிக்காமல் எதேச்சதிகாரம் செய்து வந்ததால் தமிழகம் முழுவதிலும் அரசு மருத்துவமனைகளில் ஒப்பந்த முறையில் பணிபுரியும் செவிலியர்கள் ஒன்றுதிரண்டு கடந்த

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, கேரளத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

இரண்டு நாட்களாக உண்ண உணவின்றி, உடுத்த உடையின்றி, இயற்கை உபாதைகளை நிவர்த்தி செய்வதற்கான இடமின்றி டி.எம்.எஸ். வளாகத்தில் வாழ்வாதாரப் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

இதுகுறித்து ஊடகங்கள் செய்தி வெளியான பிறகு சுகாதாரத் துறை அமைச்சர் விஜயபாஸ்கர் படிப்படியாக காலியிடம் உருவாகும்போது செவிலியர்கள் நிரந்தரப்படுத்தப்படுவார்கள் எனவும், அவர்களை இந்த அரசு கைவிடாது எனவும் அறிக்கை கொடுத்தார். அவர் சொன்ன படிப்படியாக நிரந்தரமாக்கப்படுவார்கள் என்பதன் பொருள் ஏற்கெனவே நிரந்தரப் பணியில் உள்ள செவிலியர்கள் ஓய்வு பெற்று அவ்விடம் காலியாகும்போது அதில் இப்போது ஒப்பந்த முறையில் பணியமர்த்தப்பட்டுள்ள செவிலியர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்பதாகும். தமிழ்நாட்டில் மொத்தமுள்ள செவிலியர் பணியிடங்கள் சுமார் 14,500. இவற்றில் ஒரு வருடத்திற்கு 200 முதல் 250 நிரந்தர செவிலியர் பணியிடங்கள், ஓய்வு, இறப்பு மற்ற இதர காரணங்களால் காலியாகும் என்று வைத்துக் கொண்டால், இப்போது ஒப்பந்த முறையில் பணியாற்றுபவர்கள் நிரந்தர பணியாளர்களாக 40 வருடங்களுக்கு மேலாக காத்திருக்க வேண்டிருக்கும்.

இதைச் சுட்டிக்காட்டி தெளிவுபடுத்தினால், செவிலியர் சங்கத் தலைவர்களை பேச்சுவார்த்தைக்கு அழைப்பதாகக் கூறி கட்டைபஞ்சாயத்து நடத்தி, அவர்கள் தங்கள் போராட்டத்தை உடனடியாக விலக்கிக் கொள்ளாவிட்டால் விளைவுகள் விபரீதமாக இருக்கும் என்று காவல் துறையினரை வைத்து மிரட்டி சுமார் 4 மணி நேரத்திற்கும் மேலாக பேச்சுவார்த்தை என்ற பெயரில் அடைத்து வைத்து அச்சுறுத்தி, கடைசியில் செவிலியர் சங்கத் தலைவர்கள் அந்த இடத்திலிருந்து வெளியேற வேண்டுமானால் போராட்டத்தை விலக்கிக் கொள்வதாக சொன்னால் மட்டுமே அங்கிருந்து வெளியேற முடியும் என்ற நிலையில், சமயோசிதமாக சிந்தித்து போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக ஒப்புக்கொண்டு சுகாதாரத் துறை அமைச்சர் கட்டாயப்படுத்தியதன் பேரில் ஊடகங்களுக்கு பேட்டியளித்துவிட்டு இரவு 9.30 மணியளவில் டி.எம்.எஸ். வளாகத்திற்கு வந்து, தங்கள் சக ஊழியர்களிடம் நடந்தவற்றை தெரிவித்ததன் பேரில் செவிலியர்கள் அனைவரும் வெகுண்டெழுந்து அடக்குமுறைக்கும், அடாவடித்தனத்திற்கும், அராஜகத்திற்கும் முடிவு கட்ட போராட்டத்தை, உரிமைகளைப் பெறும் வரையில் கைவிடப் போவதில்லை என்று சூளுரைத்து போராட்டத்தை தொடர்ந்து நடத்த முடிவெடுத்துள்ளனர்.

செவிலியர்கள் இளம்பெண்கள் என்றும் பாராமல் அவர்கள் மீது அச்சுறுத்தலையும், காவல்துறை மூலம் அடக்குமுறையையும், பேச்சுவார்த்தை என்ற பெயரில் கட்டைபஞ்சாயத்து நடத்தி அடாவடித்தனத்தையும் கட்டவிழ்த்து விட்டுள்ள சுகாதாரத் துறை அமைச்சரின் சட்டவிரோதச் செயலை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. பெண்கள் என்றால் ஏளனமாக நினைக்கும் அமைச்சர்களும், அதிகாரிகளும் அவர்களை மிரட்டி, அச்சுறுத்தி பணிய வைக்கலாம் என நினைத்து செயல்பட்டிருப்பது அவமானகரமானது. சட்டப்படி போராட்டம் நடத்தவும், கோரிக்கைகளை கேட்கவும் அனைத்து தரப்பினருக்கும் உரிமை உள்ளது. போராட்டத்தில் உள்ள நியாயத்தை புரிந்துகொண்டு அதை சரி செய்ய முன்வராமல் வன்முறை, அச்சுறுத்தல், அடாவடித்தனம் போன்ற இழிசெயல்கள் மூலம் அரசின் கொள்கை இதுதான் என்பதை நிரூபித்துள்ளனர்.

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்**

எண் : 46, நேராயத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601


ஆட்சியாளர்களின் அடாவடித்தனமும், செவிலியர்கள் போராட்டத்தை ஒடுக்க மேற்கொண்ட அணுகுமுறையும், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள் என அனைத்துத் தரப்பினரையும் அதிர்ச்சியடைய வைத்துள்ளது. செவிலியர்களின் போராட்டத்தை அதிகாரம், ஆணவம் மற்றும் அச்சுறுத்தல்கள் மூலம் ஒடுக்கப் பார்த்த ஆட்சியாளர்களின் இழிசெயலைக் கண்டித்து தமிழகம் முழுவதிலும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் அனைத்து மாவட்ட, வட்டத் தலைநகரங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளின் முன்பு **இன்று (29.11.2017) பெருந்திரள் ஆர்ப்பாட்டம்** நடைபெறுகிறது. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் உடனடியாக தலையிட்டு செவிலியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிட வேண்டும் என தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது. செவிலியர்கள் போராட்டம் அவர்கள் குறிக்கோளை அடையும் வரையும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அவர்கள் போராட்டத்திற்கு பக்கபலமாக இருந்து ஆதரவளிக்கும்.**

**(மு. அன்பரசு)**
மாநில பொதுச் செயலாளர்
தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்